**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் திங்கள் கிழமை**
**அசல் வழக்கு எண். 12/2026**

கந்தசாமி ..வாதி

..எதிர்..

1. ராமசாமி
2. கோவிந்தராஜ்
3. கதிரேசன் ..பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 09.03.2026ம் தேதியன்று விசாரணைக்கு என் முன்னிலைக்கு கொண்டுவரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.ராமசாமி B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ரவிசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இன்று வாதி தரப்பில் அழைத்தும் ஆஜரில்லை எந்தவித முகாந்திரமும் இல்லை எனவே இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

அசல் வழக்கானது வாதி அவருக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு சின்னகாளிபாளையத்தில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் தார்ரோட்டில் இருந்து கிழபுற பிரிந்து தெற்கு நோக்கி க.ச.304/2 ஈ, க.ச.304/2 எப்2, 302 காலையில் கிழகோட்டில் தெற்கு நோக்கி செல்லும் 16 அடி அகல தடம் என்றும், அது வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது வண்டித் தடம் என்றும், விளம்புகை செய்து உத்திரவிட்டும், வாதி அவருக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு க.ச.304/2 ஈ, க.ச.304/2 எப்2, 302 காலையில் கிழக்கோட்டில் தென்வடலாக செல்லும் 16 அகல வண்டிப்பாதையை வண்டி பாதையாக வைத்து வண்டி வாகனாதிகள் ஓட்டி வாதி சுவாதினத்தில் வைத்து

அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களை சேர்ந்த நபர்களோ தடுத்து இடைஞ்சலும், இடையூறும் ஏற்படுத்த முற்படக் கூடாது என்று ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் மற்றும் தாவா செலவுத் தொகையினை வாதிக்கு பிரதிவாதி செலுத்த உத்தரவிட வேண்டும் என அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

No representation. Plaintiff called absent. Despite of conditional orders plaintiff fails to turnup. Hence suit dismissed for default no cost.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.09 12:08:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

**Fair/Draft Judgment**
O.S.No.12/2026
Dated: 09.03.2026
ADMC – Tiruppur.